



தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06




## வாக்குச் சீட்டு அச்சிடுவதற்கான ஏற்பாடுகள் தயார் - அரசாங்க அச்சுத் திணைக்களம்




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்குத் தேவையான அடிப்படைப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்க அச்சுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அச்சிடுதல் தொடர்பான ஆய்வுகள் உள்ளிட்ட அடிப்படைப் பணிகளை முடிக்க எதிர்பார்த்துள்ளதாக அரச அச்சக மா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்தார்.

அச்சுப் பிழைகள், வாக்குச் சீட்டு திருத்தங்கள் உள்ளிட்ட அனைத்தும் மீண்டும் சரிபார்த்து, அதன் துல்லியத்தை தேர்தல் ஆணைக்குழு மறு ஆய்வு செய்து, அச்சிடுதல் தொடர்பான பணிகள் இந்த நாட்களில் மேற்கொள்ளப்படும் என்றார். பின்னர், உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கும் பணி அடுத்த வாரம் நடைபெற உள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான ஏனைய ஆவணங்களை அச்சடிக்கும் பணி ஏற்கனவே அரச அச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரச அச்சக மா அதிபர் கங்கானி லியனகே மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சோற்றுக்காக போராடும் இனம் நாமல்ல என்பதை தமிழ் மக்கள் நிரூபிக்கவேண்டும் - சாணக்கியன்

வெறுமனே சோற்றுக்காகப் போராடும் இனம் நாமல்ல என்பதை தமிழரசுக் கட்சியின் வெற்றியின் மூலம் உறுதிப்படுத்த வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். இலங்கை தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், "வெறுமனே சோற்றுக்காகப் போராடும் இனம் நாமல்ல என்பதை தமிழரசுக் கட்சியின் வெற்றியின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் தவறானவர்களைத் தெரிவுசெய்து மக்கள் தாம் செய்த தவறினை நிவர்த்தி செய்வதற்கான முதலாவது சந்தர்ப்பமாக இந்த தேர்தல் இருக்கின்றது. ஜனநாயக ரீதியில் சர்வதேசத்திற்கும் இந்த பெரும்பான்மை அரசாங்கத்திற்கும் எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு இந்த தேர்தல் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக எமக்கு அமைந்திருக்கின்றது.

எனவே நாம் இந்த சந்தர்ப்பத்தினை நல்லதொரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசாங்கம் தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கையில் ஈடுபடுமாக இருந்தால் அது மக்களது ஜனநாயக சுதந்திரத்தில் கைவைக்கும் நிலைப்பாடு ஆகும். ஆனால் அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமாக இருந்தால் அதற்கும் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாம் பின்னிற்க மாட்டோம். எனவே நாம் எமது தேர்தல் வெற்றிகளை முன்னிறுத்திச் செயற்படுவதற்கு அனைவரும் தமிழரசுக்கட்சியின் தலைமையில் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது வேட்பாளர்களை நாம் தேடித் தேடி தெரிவு செய்து வருகின்றோம். அந்த வகையில் எமது வேட்பாளர் பட்டியலில் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட கல்வி மான்களே உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர். எமது கட்சியில் எந்தவொரு ஊழல் மோசடி, கொலைக் குற்றச்சாட்டு மற்றும் மண் மாபியாவில் ஈடுபட்டவர்கள் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாம் சிவநேசத்துரை சந்திரகாந்தனைப்போல் கொலைகாரர்களை தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இணைத்துக் கொள்ளவில்லை.

இந்த நிலையில்தான் தலைநகரம் கொழும்பிலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுதந்திர தின ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். ஆனால் இந்த நாட்டிலே எவருக்குமே சுதந்திரமில்லை. ஆனால் இம்முறை சுதந்திரதினத்தை இந்த நெருக்கடியான சூழலிலும் கொண்டாடித் தீர வேண்டுமென ஜனாதிபதி நிற்கின்றார். ஏனெனில் மக்கள் சுதந்திர தினத்தினை மறந்துவிடுவார்கள் என்றும் அவர் கூறுகின்றார். நாட்டில் வாழும் எவருமே இன்று பொருளாதாரச் சுதந்திரம் உள்ளிட்ட எந்தவிதமான சுதந்திரத்தினையும் அனுபவிக்கவில்லை.

அது தமிழர்களுக்கும் இல்லை. முஷ்லிம்களுக்குமில்லை. ஆட்சியாளர்களின் ஊழல் மோசடி உள்ளிட்ட தவறுகளால் நாட்டு மக்களுக்கு தற்போது பொருளாதார சுதந்திரம்கூட மறுக்கப்பட்டுள்ளது. மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாமலிருக்கின்றனர். எனவே நாம் கிழக்கில் கறுப்புச் சுதந்திர தினத்தினை அனுஷ்டிப்பதற்குத் தயாராகி வருகின்றோம் என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

அந்த வகையில் கடந்த 75 ஆண்டுகளாக தமிழர்களுக்கு அரசியல் சுதந்திரம் மறுக்கப்பட்டு வந்துள்ளதைக் காண்கின்றோம். எனவே இந்தமுறை சுதந்திர தினத்தில் நாம் எமது பாரிய எதிர்ப்பினை கிழக்கில் வெளிப்படுத்துவதற்குத் தயாராகி வருகின்றோம்.

எனவே சர்வதேசத்திற்கும் பெரும்பான்மைச் சமூகத்திற்கும் தமிழர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை எடுத்துக்கூறும் முக்கிய தினமாக பெப்ரவரி நான்காம் திகதி நாம் முன்னெடுக்கவிருக்கின்ற இந்த கறுப்புச் சுதந்திர தின எதிர்ப்பு நாள் அமைய வேண்டும்.தமிழர்களின் விடயங்களைக் கையாளும் சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புக்களுக்கு நாம் முன்னெடுக்கும் போராட்டங்கள் மூலம் இன்னமும் எமக்கு அரசியல் உள்ளிட்ட அனைத்து எரிமைகளும், சுதந்திரங்களும் மறுக்கப்பட்ட வருகின்றன என்பதனை பலமாக நாம் எடுத்துக்கூற வேண்டும்.

நாம் போராட்டத்தில் ஈடுபட்டது தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வினைப் பெறுவதற்காகவே என்பதை சர்வதேசத்திற்கும் சிங்கள பெரும்பான்மையினத்திற்கும் எடுத்துக்கூறவேண்டிய நிலைப்பாட்டில் இருக்கின்றோம். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் எமது இனத்தின் இருப்பினை உறுதிப்படுத்துவதற்கு தமிழரசுக் கட்சியினை பெரும்பான்மையாக வெற்றிபெறச் செய்ய வேண்டும். வெறுமனே சோற்றுக்காகப் போராடும் இனம் நாமல்ல என்பதை தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து வெற்றிபெற வைப்பதன் மூலம் மக்கள் அதனை நிரூபிக்க வேண்டும். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த எதிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை செஸ் சம்மேளன சம்பியன்ஷிப் போட்டியில் மாளிகைக்காடு சபீனா மாணவர்கள் வெற்றி

(மாளிகைக்காடு நிருபர்)



தேசிய இளைஞர் சதுரங்க போட்டியில் கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலய மாணவன் எம்.எச்.எம். ருஸைக் 12 வயது பிரிவில் இரண்டாம் இடத்தையும், என். ஷராப் அஹமட் 12 வயது பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

"இலங்கை செஸ் சம்மேளனத்தின் ஏற்பாட்டில்" அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கான (ஆண்,பெண்) செஸ் சம்பியன்ஷிப் போட்டியானது இம் மாதம் 28, 29 (சனி, ஞாயிறு) திகதிகளில் சாய்ந்தமருது அல் ஹிலால் பாடசாலையில் நடைபெற்றது. இதில் 12 வயது பிரிவின் கீழ் விளையாடி இவர்கள் இந்த வெற்றியை பதிவு செய்துள்ளனர்.

இந்த வெற்றிக்காக உழைத்த பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.இர்ஷாத் உட்பட இந்த போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டுள்ளது. இந்த போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்கள் தேசிய ரீதியில் விளையாடக் கூடிய வாய்ப்பையும், சர்வதேச சமட்டத்தில் விளையாடக் கூடிய வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்குக் கடிதம்



தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் அவர்களின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதிக்கு நேற்றைய தினம் இவ்வாறு கடிதத்தை அனுப்பியிருந்தார். தேர்தலுக்கான சரியான சூழலை உருவாக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதால் இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு சில நிறுவனங்களின் ஆதரவு மந்தகதியில் காணப்படுவதாக ஜனாதிபதிக்கு இந்தக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## ரஃபேல் நடாலின் சாதனையை சமன் செய்த ஜோகோவிச்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று நடந்த ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் செர்பிய வீரர் ஜோகோவிச் வெற்றி பெற்று 10 ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் கிரீஸ் நாட்டை சேர்ந்த சிட்சிபாசுடன் மோதினார்.

இருவரும் ஒருவருக்கு ஒருவர் சவால் அளிக்கும் விதத்தில் விளையாடியதால் ஆட்டத்தில் அனல் பறந்தது. இந்த போட்டியில் 6-3, 7-6(4) 7-6 (5) என்ற செட் கணக்கில் ஸ்டீபனோஸ் சிட் சிபாஸை வென்று சாம்பியன் பட்டத்தை ஜோகோவிச் கைப்பற்றினார். இது இவர் வெல்லும் 10ஆவது அவுஸ்திரேலிய ஓபன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

கிராண்ட்ஸ்லாம் என்ற அளவில் இந்த வெற்றியின் மூலம் அவருக்கு 22ஆவது பட்டமாகும். இதன் மூலம் ரஃபேல் நடாலின் சாதனையை சமன் செய்திருக்கிறார். ஆட்டத்தில் ஜோகோவிச் தான் வெற்றி பெறுவார் என்ற எதிர்பார்ப்பு பெரும்பாலான ரசிகர்கள் மத்தியில் காணப்பட்டது.

ஆனால் அவ்வளவு எளிதாக ஜோகோவிச் வெற்றியை பறிக்க, கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் விடவில்லை. முதல் செட்டை அவர் எளிதாக விட்டுக் கொடுத்தாலும், அடுத்த 2 செட்களில் கிரீஸ் வீரர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி ஜோகோவிச் ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்தார். இந்த வெற்றியை ஜோகோவிச் ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். சாம்பியன் ஜோகோவிச்சிற்கு வாழ்த்துகளும் பாராட்டும் குவிந்துள்ளன.

## இந்தியா வசமானது U 19 மகளிர் கிண்ணம்



தென் ஆபிரிக்காவின் சென்வெஸ் பார்க் மைதானத்தில் இடம்பெற்ற 19 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து மகளிர் அணியை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய மகளிர் அணி கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து வீராங்கனைகள் இந்திய பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். இறுதியில் 17.1 ஓவர்களில் இங்கிலாந்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இதையடுத்து, 69 ஓட்டங்கள் எடுத்தால் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் டி20 சாம்பியன் பட்டம் வெல்லலாம் என்ற முனைப்புடன் இந்தியா தொடக்க வீராங்கனைகள் களமிறங்கினர். தொடக்க வீராங்கனையாக களமிறங்கிய அணித்தலைவர் ஷிபாலி வர்மா 15 ஓட்டங்களிலும், ஸ்வேதா 5 ஓட்டங்களிலும் வெளியேறினர். அடுத்துவந்த சவுமியா திவாரி, திரிஷா பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். திரிஷா 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்திய அணி 14 ஓவரில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கான 69 ஓட்டங்களை எடுத்தது. சவுமியா திவாரி 24 ஓட்டங்களுடனும், ஹிரிஷிதா ஓட்டங்கள் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

இதன் மூலம், இங்கிலாந்தை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி 19 வயதிற்கு உட்பட்டோருக்கான மகளிர் டி20 சாம்பியன் பட்டத்தை இந்தியா வென்றது. சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவுக்கு வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

மருதங்கேணி மாமுனை பிரதேசத்தில் கடலில் நீராடச் சென்ற மூவரில் 15 வயது சிறுவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.
நேற்று (29) பிற்பகல் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகவும், சிறுவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். காணாமல் போன சிறுவன் நாகர்கோவில் கிழக்கு நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

மற்றுமொரு சிறுவன் நீரில் மூழ்கிய நிலையில், அவர் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். காணாமல் போன சிறுவனை தேடும் பணியில் பொலிஸார், கடற்படையினர், மீனவ மக்கள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தம்புத்தேகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களுந்தேகம பிரதேசத்தில் உள்ள நல்லச்சிய நீர்த்தேக்கத்திலிருந்து நீரினை எடுத்துச் செல்லும் கால்வாயில் சைக்கிளில் பயணித்த ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். மினிமுதுகம, களுந்தேகம பிரதேசத்தில் வசிக்கும் 63 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## பெட்ரோல், டீசல் ஒரே நாளில் விலை உயர்வு



பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தானில் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் பெட்ரோல், டீசல் விலை தலா ரூ.35 உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே விலை உச்சத்தை எட்டிவிட்ட அத்தியாவசியப் பொருள்களை வாங்க முடியாமல் திண்டாடி வரும் அந்நாட்டின் ஏழை, நடுத்தர மக்களுக்கு இந்த விலை உயர்வு அடுத்த அதிர்ச்சியாக அமைந்துள்ளது.

நீண்டகாலமாக தொடரும் அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தின் சுரண்டல்கள், ராணுவ ஆட்சிகளால் ஏற்பட்ட அரசியல் குழப்பம், அரசு ஆதரித்த மத அடைப்படைவாத பயங்கரவாத அமைப்புகள் அவர்களுக்கு எதிராகவே திரும்புவது, இந்தியாவுடன் வர்த்தக உறவை முறித்துக் கொண்டது உள்ளிட்ட காரணங்களால் பாகிஸ்தான் பெரும் இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளது.

உள்நாட்டு மக்களின் உணவுத் தேவையைக்கூட பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடி வரும் அந்நாட்டில், அந்நியச் செலாவணி கையிருப்பும் வெகுவாக குறைந்துவிட்டது. அமெரிக்க டொலருக்கு நிகரான பாகிஸ்தான் ரூபாயின் மதிப்பு ரூ.262.60 ஆக சரிந்துள்ளது. ஏற்கெனவே சர்வதேச நிதியத்திடம் அதிக கடன் பெற்றுள்ள பாகிஸ்தான், மீண்டும் உதவி கேட்டு காத்திருக்கிறது. இதையடுத்து பல்வேறு நிபந்தனைகளை அந்நாட்டுக்கு சர்வதேச நிதியம் விதித்துள்ளது.

இது ஒருபுறம் இருக்க உள்நாட்டில் உணவுக்காக மக்கள் வீதிகளில் மோதிக் கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. பல மணி நேரம் தொடரும் மின்வெட்டு பிரச்சினையால் தொழில் நிறுவனங்கள் முதல் சாமானிய மக்கள் வரை அனைவரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தொலைக்காட்சியில் ஞாயிற்றுக்கிழமை காலை பேசிய நிதியமைச்சர் இஷாக் தார் கூறியதாவது, பெட்ரோல், டீசல் விலை லீட்டருக்கு தலா ரூ.35 உயர்த்தப்படுகிறது. இந்த விலை உயர்வு ஞாயிற்றுக்கிழமை இரவில் இருந்து அமுலுக்கு வருகிறது. இது தவிர மண்ணெண்ணெய் லிட்டருக்கு ரூ.18 உயர்த்தப்படுகிறது என்றார்.

இதன்மூலம் பெட்ரோல் விலை லிட்டர் ரூ.249.80 ஆகவும், டீசல் விலை ரூ.262.80 ஆகவும், மண்ணெண்ணெய் ரூ.189.63 ஆகவும் உயர்ந்துள்ளது. அந்நாட்டில் பெட்ரோலைவிட டீசல் விலை உயர்வாக உள்ளது. இந்த அறிவிப்பை அடுத்து பெட்ரோல் நிலையங்களில் வாகன ஓட்டிகள் அணிவகுத்தனர். பல நிலையங்கள் மூடப்பட்டன. சில இடங்களில் எரிபொருளுக்காக மோதல்களும் நிகழ்ந்து வருகின்றன. பாகிஸ்தானில் ஏற்கெனவே மின்சார கட்டணமும், எரிவாயு விலையும் 35 சதவீதம் அளவுக்கு உயர்ந்துள்ளது.

## குடியுரிமை ரத்து – பிரதமர் இராஜினாமா



பாராளுமன்ற தேர்தலில் சமர்ப்பித்த குடியுரிமை சான்றிதழ் செல்லாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, நேபாள துணைப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான ரவி லாமிச்சானே தனது அனைத்துப் பதவிகளையும் ராஜினாமா செய்துள்ளார். அமெரிக்க குடியுரிமை பெற்று அங்கேயே பல ஆண்டுகளாக வசித்துவந்த ரவி லாமிச்சானே, கடந்த 2014 ஆம் ஆண்டு தனது சொந்த நாடான நேபாளத்துக்குத் திரும்பினார். பின்னர், ராஷ்ட்ரீய சுதந்திரக் கட்சியைத் தொடங்கினார். கடந்த ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அந்தக் கட்சி, 20 இடங்களில் வெற்றி பெற்று நான்காவது பெரிய கட்சியாக உருவெடுத்தது.

78 இடங்களில் வெற்றி பெற்ற நேபாள கம்யூனிஸ்ட் கட்சி, 32 இடங்களில் வெற்றி பெற்ற மாவோயிஸ்ட் மையம், ரவி லாமிச்சானேவின் 14 இடங்களைப் பெற்ற ராஷ்ட்ரீய பிரஜாதந்திர கட்சி, 12 இடங்கள் பெற்ற ஜனதா சமாஜ்வாதி கட்சி, 6 இடங்களைப் பிடித்த ஜன்மத் கட்சி, 4 இடங்களில் வெற்றி பெற்ற நாகரிக் உன்முக்தி கட்சி ஆகியவை கூட்டுசேர்ந்து கடந்த டிசம்பரில் புதிய கூட்டணி அரசை அமைத்தன. மாவோயிஸ்ட் மைய கட்சியைச் சேர்ந்த புஷ்ப கமல் தாகல் நேபாள புதிய பிரதமராக பதவியேற்றார். ரவி லாமிச்சானே துணைப் பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் பதவியேற்றார். முன்னதாக, ரவி லமிச்சானே 2018 இல் தனது அமெரிக்க குடியுரிமையை கைவிட்டார். ஆனால், அதன்பிறகு நேபாள குடியுரிமையை பெறுவதற்கு அவர் விண்ணப்பிக்கவில்லை.

இந்த நிலையில், நேபாள குடியுரிமையை முறைப்படி பெறாமல் தேர்தலில் போட்டியிட்டு, நாட்டின் துணைப் பிரதமர் ஆனதை எதிர்த்து நேபாள உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், 'அமெரிக்க குடியுரிமையைக் கைவிட்ட பிறகு, நேபாள குடியுரிமை சான்றிதழைப் பெறுவதற்கான நடைமுறைகளை ரவி லமிச்சானே மேற்கொள்ளவில்லை. அந்தவகையில், நேபாள பிரதிநிதிகள் சபைக்கான தேர்தலில் வேட்பாளராக ரவி லாமிச்சானே போட்டியிட முடியாது என்பதோடு, அந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படவும் முடியாது' என்று தீர்ப்பளித்தது.